# பூநகரியில் கண்ணிவெடியில் ஜீப் சிக்கியது
# அதிஉயர் படை அதிகாரிகள் மூவர் பலி

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 29 இதழ் 121
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11 — 06 — 1992

(கொழும்பு)
பூநகரிப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் ஜீப் வண்டி ஒன்று சிக்கிச் சிதறியதில் அதிலிருந்த இராணுவ, கடற்படை அதி உயர் அதிகாரிகள் மூவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை - மன்னாரில் படைபலம் அதிகரிப்பு

(கொழும்பு)
திருமலை, மன்னார் மாவட்டங்களில் படை பலம் அதிகரிக்கப்பட்டு ளதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இவ்விரு மாவட்டங்களுக்

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் அதிரடியே ஊரடங்கிற்கு காரணம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா படையினர்மீது மேற்கொண்டு வரும் அதிரடித்தாக்குதல்கள் அதிகரித்துவருவதை அடுத்தே வடபகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் மீது விடுதலைப் புலிகள் இரண்டு தாக்குதல்

(4ம் பக்கம் பார்க்க)

## ★ தெல்லிப்பளை - சண்டிலிப்பாயில்
# அகோர விமானத் தாக்குதல்
# ஐவர் உடல் சிதறி பலியாயினர்

## - 15 பேர் படுகாயம் -

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் பகுதிகளில் நேற்று மாலை குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய மூர்க்கமான தாக்குதலில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் உடல்கள் சிதறி பலியானார்கள். இவர்களில் மூவர் பெண்கள். 15 பேர் படுகாயமடைந்தனர்.

## துர்க்கை அம்மன் சுற்றுடலில் கணவன், மனைவி, மகள், மைத்துனர் பலி

[யாழ்ப்பாணம்]
தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய சுற்றுடல் பகுதி குடியிருப்புக்களை நோக்கி நேற்று மாலை 4-30 மணியளவில் இரு பொம்மர்கள் மேற்கொண்ட கொடூர தாக்குதலில் ஒருகுடும்பத்தைச்சேர்ந்த கணவன், மனைவி. மகள், மைத்துனர் நால்வரும் ஸ்தலத்திலே துடிதுடித்துப் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 4 30 மணியளவில் இரண்டு பொம்மர் விமானங்கள் ஆலய சுற்றுடல் பகுதியை நோக்கி மாறி, மாறி குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

மாவிட்டபுரத்திலிருந்து இடம் பெயர்ந்து மல்லாகம் தெல்லிப்பளை காங்கேசன்

[4-ம் பக்கம் பார்க்க]

## சண்டிலிப்பாயில் பெண் பலி சிறுவர் பலர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
வலி. வடக்குப் பகுதியைச் சுற்றி நேற்று பிற்பகல் 3-45 மணியளவில் வட்டமிட்ட 3 பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள் சண்டிலிப்பாய் மத்தி, மாகியப்பிட்டி; கல்வளை குடியிருப்புக்களை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

வயோதிப மாது ஒருவர் ஸ்தலத்தில் துடிதுடித்து உடல் சிதறிப் பலியானார். குழந்தைகள், சிறுவர்கள் உட்பட 15 க்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி கண்ணம்மா கணபதிப்பிள்ளை (52 வயது) என்பவரே பலியானவராவார்.

[4ம் பக்கம் பார்க்க]

## ஹெலி தாக்குதல்; ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)
மல்லாகம் பகுதியில் நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டு கடுமையாக துப்பாக்

(4-ம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையிலும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பொன்னாலை கிழக்குப் பகுதியில், நேற்று மாலை பொம்மர் விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்று மாலை 5-00 மணியளவில் இப்பகுதியைச் சுற்றி வட்டமிட்ட மூன்று பொம்மர் விமானங்கள் அடுத்தடுத்து வீசிய ஐந்து குண்டுகளினால், தி.நவரத்தினம், எஸ் கிருஷ்ணபிள்ளை, சு. சமதக்கினி ஆகியோரின் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இப்பகுதிகளில் விமானங்கள் வட்டமிடுவதற்கு முன்னர் ஹெலி வட்டமிட்டதனால், சேதமடைந்த வீடுகளிலிருந்த

(4ம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதியில் பெரும் பதற்றம்

[யாழ்ப்பாணம்]
தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், பொன்னாலைப் பகுதிகளில் நேற்று மாலை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சால், வலிகாமம் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

விமானத் தாக்குதல் ஆரம்பமானதையடுத்து இப்பகுதிகளிலும் சுன்னாகம், மானிப்பாய், உடுவில் பகுதிகளிலும் கடைகள் மூடப்பட்டதுடன், மக்கள் மத்தியில் பதற்றமும் ஏற்பட்டது.

விமானத் தாக்குதல் நடைபெற்றபோது, ஹெலியில் இருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது. (சி)

## செஞ்சிலுவைசங்கத்திடம் குண்டுவீச்சு பற்றி முறையீடு

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை ஆலய 'சுற்றுடல் பகுதியை நோக்கி மீண்டும் நேற்று பொம்மர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டதை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறையிட்டுள்ளார்.

31-ம் திகதி ஆலயத்தை

[4-ம் பக்கம் பார்க்க]

## 20 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)
திருமலையிலும், மன்னாரிலும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே நடைபெற்ற வெவ்வேறு மோதல்களில் 20 இராணுவத்தினர் இறந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருமலையில் 16 இராணுவமும், மன்னாரில் 4 இராணுவமும் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுளது. (வி)

## தெரிவுக் குழுவை இயக்க அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)
எவர்பகிஷ்கரித்தாலும்இனப் பிரச்னை தீர்வு தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைத் தொடர்ந்தும் செயல்படுத்த அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்தாலோ அல்லது பகிஷ்கரிப்பைக் கைவிட்டாலோ இந்த முடிவில் மாற்றம் இருக்காது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை தெரிவுக் குழுத் தலைவர் மங்கள முனசிங்கா பதவி விலகினால் புதிய ஒரு

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள் அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ 2270)

## பொதுக்கூட்டம்

[அரியாலை]

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24-ந் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வழக்கம்பரை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது [59]

## வெங்காயம் விலை அதிகரிப்பு

[பண்டத்தரிப்பு]

வலிகாமம் மேற்கு பகுதியில் சின்னவெங்காயத்தின் விலை அதிகரித்து வருகின்றது. பண்டத்தரிப்பு சந்தையில் கடந்த சில நாட்களாக கிலோ 15 ரூபா தொடக்கம் 18 ரூபா வரை சின்னவெங்காயம் விற்கப்பட்டுவருகின்றது. (71)

## கோரிக்கை

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் எழுதுவினைஞர் பதவி நிரப்பப்படாமையினால் இக்கல்லூரி வளர்ச்சி பாதிக்கப்படுவதால் ஒரு எழுதுவினைஞரை நியமிக்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளரிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது (159)

## குழந்தை மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலை சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த 10 மாதக்குழந்தை காய்ச்சல், சளிசுரம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு மரணமானது.

பண்டத்தரிப்பு சாந்தையைச் சேர்ந்த செல்விஸ்கையினு பாலகிருஸ்ணன் என்ற குழந்தையே மரணமானது.

ஒருவாரத்தில் காய்ச்சல், சளிசுரம், வயிற்றோட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு, நேற்றுவரையில் ஒரு வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகள் மரணமாகியிருக்கின்றன. (56)

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''சூழல் மாசடைதல் பேணுதல் அபிவிருத்தி'' பற்றிய கருத்தரங்கு யாழ். பல்கலைக் கழக புவியியற் கழகத்தினால் இன்று 11-ந் திகதி வியாழக்கிழமை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது

புவியிற்றுறைத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இக்கருத்தரங்கு, பிரேசிலில் நடைபெறும் புவிக்கோள உச்சி மகாநாடு யூன் 3-ந் திகதி தொடக்கம் 14-ந் திகதி வரையிலான நிகழ்வையொட்டி நடாத்தப்படுகின்றது. (சு)

தமிழர் பிரச்னை:

## சுதந்திர கட்சிக்கு அக்கறையில்லை

[கொழும்பு]

இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்க்கப்படுவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதுவித அக்கறையும் கிடையாதென அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழர் பிரச்னைக்குதீர்வு காண்பதற்கு தமிழ்-முஸ்லிம் கட்சிகளை மீண்டும் அழைத்துப் பேசுவதென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு கடந்த மாதம் 29ம் திகதி முடிவெடுத்தது.

ஆனால் இதுவரையில் தமிழ்-முஸ்லிம் அரசியல்கட்சிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அழைக்கவில்லை. இந்நடவடிக்கை சுதந்திரக்கட்சியின் அலட்சிய மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது என்றார். (க)

## அதிபர் சிக்கினார்

(கொழும்பு]

பாடசாலையில் மாணவர் ஒருவரை அனுமதிப்பதற்கு லஞ்சம் வாங்கிய பாடசாலை அதிபர் ஒருவர் லஞ்சதிணைக்கள அதிகாரிகளிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

கோட்டாவ தர்மபால வித்தியாலய அதிபர் 300 ரூபாவை லஞ்சம் பெறும்போது, கையும் மெய்யுமாக இவ் அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டார். [கே]

## திருவள்ளுவரும் ஒரு விடுதலைப் புலியாம்!

[பெங்களூர்]

கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் அமைந்துள்ள திருவள்ளுவரின் சிலைக்கு பொலிஸ் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டு காலமாக இரவும்பகலும் திருவள்ளுவருக்கு பொலிஸார் காவல்புரிந்து வருகின்றார்கள். பெங்களூர் தமிழ்ச் சங்கம் இந்தச் சிலையை அமைத்துள்ளது. ஆனால் வள்ளுவர்சிலை வைக்கக்கூடாதென கன்னடர்கள் எதிர்க்கிறார்கள்! ஏன் தெரியுமா?

திருவள்ளுவரும் ஒரு விடுதலைப்புலியாம்! அவருக்கு சிலை வைக்கக் கூடாதாம். கடந்த ஒரு வருடமாக இந்தத் தகராறு தொடர்வதால் இச்சிலைக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (சி)

## அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் மாற்றம்

[சித்தன்கேணி]

பொது எழுதுனர் சேவையிலும், நடுத்தர சேவைகளிலும் II ஆம் வகுப்பு 'அ' பிரிவிலிருந்து I ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு இந்த ஆண்டு தை மாதம் 15ம் திகதியிலிருந்து அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொது எழுதுநர்சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, இணைந்தசேவையின் எழுதுநர் மற்றும் நடுத்தர சேவைகளுக்கு சமனான நிலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மற்றைய திணைக்கள எழுதுநர் சேவைகள், தட்டெழுத்தாளர் சேவைகள் ஆகிய சேவையிலுள்ளவர்களுக்கு I ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு இந்த ஆண்டு தை மாதம் 15ம் திகதி தொடக்கம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க நிருவாக, மாகாண உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம். என். ஜுனைட் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும், ஆளுநர்களின் செயலாளர்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைத்துள்ளார்.

எழுதுநர், நடுத்தரசேவையின் II ஆம் வகுப்பு 'அ' பிரிவின் உத்தியோகத்தர் ஒருவருக்கு I ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு குறிப்பிட்ட வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் அல்லது அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும் 10வருடசேவையை பூர்த்தி செய்திருக்கவேண்டும். பதவி உயர்வு வழங்கப்படும் திகதிக்கு முன்புள்ள 5 வருட காலத்துக்கு திருப்திகரமாக சேவையாற்றி இருக்கவேண்டும். பதவி உயர்வு வழங்கும் பொருட்டு நடாத்தப்படும் பரீட்சையில் குறைந்தது 40 வீதம் புள்ளிகளைப்பெற்றிருக்க வேண்டும். (137]

## தனிச் சிங்களத்தில் பதில் கடிதங்கள்

(பண்டத்தரிப்பு)

மத்திய கிழக்கில் இடம் பெற்ற யுத்தத்தின்போது குவைத் நாட்டிலிருந்து பாதிக்கப்பட்டு நாடு திரும்பியவர்களுக்கான நஷ்டஈடு பெறுவதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தனிச்சிங்களத்தில் பதில் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

தங்களின் நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப்பம் கிடைத்ததாகவும், நஷ்டஈட்டுக்கான பணம் வழங்குவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் இக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க செயலகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஆங்கில மொழியிலான நஷ்டஈடுக்கான விண்ணப்பப்படிவத்தை பெற்றே இவர்களில் பலர் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்து இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு தபால் மூலம் அனுப்பிவைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (72)

## எதிர்கட்சிகள் பற்றி ஹமீத் விமர்சனம்

(கொழும்பு]

''இன்னும் 25 வருடங்கள் சென்றாலும் எதிர்கட்சிகள் ஆட்சியை பிடிக்கமுடியாது.

இவ்வாறு நீதி உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீட் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்த்து உரையாற்றும் போது கூறினார்.

இதுவரை நடந்து முடிந்த தேர்தல்கள் இதனை தெளிவுபடுத்துகின்றது. எதிர்கட்சியினரும் இதனை புரிந்துகொள்வார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (கே)

## கைத்தறி மட்பாண்ட தொழிலுக்கு புத்தூக்கம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்பாண்டம், கைத்தறி நெசவு ஆகிய கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கான நிதி இந்த ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சங்கானையில் மட்பாண்ட்

(4ம் பக்கம் பார்க்க)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்: 30-11-1939

★ ★

விண்ணுலகில்: 25-05-1991



### திரு. பு. கோகுலதீபம்

அரசாங்க வைத்தியசாலையில் ஊழியம் புரிந்து தான் பிறந்த ஊருக்கே உங்கள் நாமத்தால் பெருமை தேடிக் கொடுத்தீரே! உற்றவர், உறவினர், துயருறுவோர் என பாராது அவர்கள் ஆகுலம் தீர்த்து கோகுல தீபமாய் வாழ்ந்த எங்கள் உத்தமரே. ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நாமம் என்றென்றும் மறவோம் ஐயா.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: கோ. சற்குணதேவி.
சகோதரி: பு தேவமனோகரி.
மகன்: கோ. சதீபன்.
மருமகள்: பு. கார்த்திகா.

(சி 6405)

## இலக்கியச் சந்திப்பு

(யாழ்ப்பாணம்]

யாழ். இலக்கிய வட்டத்தின் வெள்ளி ஆண்டு நிறைவு விழாவின் முதலாவது இலக்கியச் சந்திப்பு நாளை 12ம் திகதி தாவடி, அரசடி ஒழுங்கையில் உள்ள அநு. வை. நாகராசன் இல்லத்தில் நடைபெற உள்ளது.

1991ம் ஆண்டு சாகித்திய அககதமி விருது பெற்ற எழுத்தாளரான கி. ராஜநாராயணனின் படைப்புக்கள் பற்றி விமர்சிக்கப்படும்.

## External Degree Saiva Siddanta

The University of Jaffna offers a Special Degree Course in Saiva Siddanta Philosophy, leading to the Degree of Bachelor of Arts. Applications are invited from the Graduates of any recognised University, in any discipline for enrolment as external students.

Closing date will be 04 July 1992.

REGISTRAR,
University of Jaffna.
A-2212

## UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

Tenders are invited for the following from contractors registered for building works with University of Jaffna or ICTAD.

1. Repairs to hostel at Jaffna town - Stage I
2. Temporary rest room near Health Centre.

Tender forms can be obtained from works Engineer, University of Jaffna from 17-6-92-19-6-92 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following for each tender.

non-refundable deposit - Rs 200/-

Refundable deposit Rs. 2000/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 2-7-92 at 10-00 a. m.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar,
University of Jaffna,
Thirunelvely,
Jaffna. (A-2203)

# பத்திரிகையாளர்களுக்கு சோதனைமிகுந்த - 1991

# 66 பேர் கொலை; 1,264 பேர் மீது தாக்குதல்

(லண்டன்)

1991ம், 1992ம் ஆண்டுகள் பத்திரிகையாளர்களுக்கு சோதனையும், வேதனையும் மிருந்த காலங்களென்று கூறப்படுகின்றது.

''பத்திரிகையாளர்கள் பாதுகாப்புச் சங்கம்'' என்ற பெயரில் ஒரு தனி அமைப்பு அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் உண்டு. உலகில் எந்த மூலையிலும் பத்திரிகையாளர்களுக்கு கொடுமைகள் நடந்தாலும் அது சம்பந்தமான தகவல்கள் இங்கேவந்துவிடும்.

1991ம் ஆண்டுதான் பத்திரிகையாளர்கள் சந்தித்த மிக மோசமான வருடம் என்று இந்த அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபுள்ளி விபரங்கள் மிகவும் பயங்கரமானவை. சாதாரண தாக்குதலில்தொடங்கி கைது, கொலை, நாடுகடத்தல் என்ற எல்லாவிதமான கொடுமைகளையும் பத்திரிகையாளர்கள் தொடர்ந்துசந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

1991ம் ஆண்டு மட்டும் மொத்தத்தில் 66 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். 1264 பேர் கடும் தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கிறார்கள். 324 பேர் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இன்றுவரை சிறைக்குள் இருக்கும் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை 108.

சில நாட்களுக்கு முன் சிறையிலிருந்து விடுதலையான ஹெய்டி தீவுகளைச் சேர்ந்த ஒரு நிருபரின் நிலைமையைப் பார்த்து பலர் அதிர்ந்தார்கள். ஒரு பொலிஸ் நிலையத்துக்கு தீவைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த வருடம் நவம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டார். தப்பாக இவரைக் கைதுசெய்துவிட்டோம். இவர் மீது குற்றம் ஏதுமில்லை எனக் கூறி கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்டார்.

சிறையில் பட்ட அடி-உதையாலும், பட்டினியாலும்இவர் தற்போது நடக்கமுடியாமல் கடும் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் மொராக்கோவைச் சேர்ந்த ஒரு பத்திரிகை ஆசிரியர், ஒருதொழிற் சங்கத் தலைவருக்கு தண்டனை கொடுத்தது ''தவறு'' என்று விமர்சனக் கட்டுரை எழுதியதால் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டுள்ளார்.

அப்துல்லா அலி என்கின்ற லிபிய எழுத்தாளர் 1975ம் ஆண்டு லிபிய சிறையில் அடைக்கப்பட்டார். அவர் இன்னும் உயிரோடு இருக்கின்றார் என்பது தவிர அவரைப் பற்றி வேறு விபரங்கள் இதுவரை அவர் குடும்பத்தினருக்கே தெரியாது.

பேனா பிடிக்கின்றவர்களைப் பழிவாங்குகிற விஷயத்தில் உலகில் சீனாவை மிஞ்சமுடியாது.

உலகிலேயே மிகஅதிகமான பத்திரிகையாளர்கள் சிறையில் இருப்பது சீனாவில்தான். தியனன்மென் சதுக்கத்தில்நடந்த மாணவர் புரட்சியின்போது கைதுசெய்யப்பட்ட 29பத்திரிகையாளர்களின் நிலைபற்றி இன்றுவரை வெளி உலகத்துக்கு எதுவுமே தெரியாது.

மேற்கூறப்பட்ட அனைத்தையும் முறியடிக்கும் விதமாக கடந்தவருடம் யூகோஸ்லாவியாவில் நடந்த கலவரத்தின் போது 21 பத்திரிகை நிருபர்கள் குறிவைத்துத் தாக்கிக் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தசோக சம்பவங்களை எல்லாம் உலகின் கவனத்துக்கு கொண்டுவருவதற்காகவே ''அகில உலகப் பத்திரிகைச் சுதந்திரநாள்'' என்று ஒரு தினத்தைக்கடந்த மாதத்தில் அறிவித்தது யுனெஸ்கோ.

இப்போது 1992ம் ஆண்டில் அண்மையில் அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற கலவரத்தைத் நேரடியாகப் பார்த்து எழுதுவதற்கு சென்ற 12க்கும் அதிகமான பத்திரிகை நிருபர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் துப்பாக்கியால் சுடப்பட்டும், பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டும் படுகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டார்கள்.

தற்போதைய நிலையைப் பார்த்தால், 1991ம் ஆண்டை 1992ம் ஆண்டு மிக சுலபமாக ஜெயித்து விடும்போல் தெரிகின்றது. (வி)

## இலவச புகையிரத ஆணைச் சீட்டுகள்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒய்வூதியம் பெறுவோர் தங்களுக்குரிய இலவச புகையிரத ஆணைச்சீட்டுக்களை சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் யாழ். அரசாங்க செயலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஓய்வூதியம் பெறுவோர் சங்கானை கிராமிய வங்கியில் தங்களுடைய ஓய்வூதியத்தை பெற்றால் சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும், யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோர் யாழ். அரசாங்கஅதிபர்செயலகத்திலும் தங்களுக்குரிய இலவச புகையிரத ஆணைச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும்

இதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் மேற்கு ஒய்வூதியம் பெறுவோர் சங்கம் மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## இராசிபலன்

11-06-1992 வியாழக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 29)

ஏகாதசி முற்பகல் 11-31 வரை, சித்திரை காலை 7-53 வரை, ஏகாதசிவிரதம், இராகுகாலம் பகல் 1-22 முதல் 2-52 வரை, சுபநேரம் காலை 7-22 முதல் 8-52 வரை.

மேடம்: பணப்புளக்கம், தொழில் உறவு, தெய்வீக செலவு.

இடபம்: மனமகிழ்ச்சி, புதிய உறவு, குடும்ப உல்லாசம்.

மிதுனம்: வியாதிச்செலவு, குடுப்பவிரிசல், யோசனை.

கடகம்: தொழில் சிரமம், பணமுடை, வேதனையான சம்பவம்.

சிங்கம்: தொழில் லாபம், அதிகப்பிரயாசம், பாராட்டு.

கன்னி: சத்துருக்கள் தொல்லை, மனவேதனை, அலைச்சல்.

துலாம்: திருமணயோகம், இனிய செய்தி, காரியசித்தி

விருச்சிகம்: மனக்குமுறல், அநாவசிய தலையீடு, பயம்.

தனுசு: சுபசோபன நிகழ்வு, குடும்பசுகம், பயணம்.

மகரம்: மனவிகற்பம், தாய்வழி உதவி, காரிய வெற்றி.

கும்பம்பம்: சிறுதொல்லை, கடன் சுமை, தொழில் பகை.

மீனம்: இடம்பெயர்வு, மனச்சஞ்சலம், வாக்குக் கலகம்

— ஜோஸ்யர்

# இந்திய ஜனாதிபதி தேர்தல்; அறிவிப்பு வெளியிடப்பட்டது

(புதுடில்லி)

இந்தியாவின் 9-வது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து வேட்புமனு தாக்கல் செய்யும் திகதி நேற்றிலிருந்து ஆரம்பமாகி கடைசி நாள் இம்மாதம் 24-ந் திகதியெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் 25 மாநிலங்களைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்களும் புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

இந்தத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 13-ந் திகதி நடைபெறும்.

இப்போதைய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனின் பதவிக்காலம் அடுத்த மாதம் 24-ந் திகதியுடன் முடிவடைகிறது. புதிய குடியரசுத் தலைவர் மறுநாள் 25-ந் திகதி பதவியேற்கும் வகையில் நேர்தல் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (கே)

### உயிருக்கு உத்தரவாதம் அளித்தால் வேலைக்கு திரும்புவோம்

[காங்கேசன்துறை]

லங்கா சிமெந்து நிறுவன காங்கேசன் சிமெந்து ஆலைக்கு வேலைக்கு அழைக்கப்பட்ட தொழிலாளர்கள் தமது உயிருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் வேலைக்குத் திரும்புவதாக தனித்தனி கடிதங்கள் லங்கா சிமெந்து நிறுவன உதவி பொதுமுகாமையாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி சிமெந்து நிறுவனம் குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த 119 தொழிலாளர்களை ஜூன் 7ம் திகதி வேலைக்கு சமுகமளிக்குமாறு ஏற்கனவே கடிதங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

இதற்கு பதிலாகவே தொழிலாளர்கள் தனித்தனி கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர். (86)

### இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று காலை 11மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தம்பதியர் கலந்து கொள்கிறார்கள்.

### மலையகப் பகுதிக்கான பத்திரம் யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் குமண கப்பலில் அரசினல் அனுப்பி வைக்கப்பட்டிருந்த பிறப்பு பதிவுபத்திரங்கள் யாவும் மலையகப்பகுதிக்கு வழங்கப்படும் பிறப்புபதிவுப்பத்திரமாகும்.

தோட்டப்பகுதிபிறப்புப் பத்திரம் என்று பொறிக்கப்பட்டுள்ள அகலமான பிறப்புப்பத்திரம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதிகளில் மகவினைப் பெற்று பிறப்புப்பத்திரங்கள் இல்லாத நிலையில் சென்றவர்களுக்கு நேற்றிலிருந்து விடுதியில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

### பனையிலிருந்து விழுந்தார்

[யாழ்ப்பாணம்]

பனைமரத்தில் சீவல்தொழில் செய்துகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் தவறிவீழ்ந்து பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வதிரி அல்வாய் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாலசண்முகம் (62 வயது) என்பவரே தவறிவீழ்ந்து பலத்த காயங்களுக்குள்ளாகியவராவார். (56)

## கடும் மழையால் ஆவணங்கள் சேதம்

(கொழும்பு)

கடந்த வாரம் பெய்த கடும் மழை, வெள்ளம் காரணமாக பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பெறுமதிமிக்க ஆவணங்கள் சேதமடைந்துள்ளன.

வெள்ளம், மூன்றடிக்கு மேல் அதிபர் காரியாலயம் கல்லூரி காரியாலயம் எங்கும் தேங்கி நின்றதால், இங்கு இருந்த பெறுமதியான பத்திரங்கள் ஆவணங்கள், பொருட்கள் என்பன நீரில் மூழ்கி சேதமடைந்தன, [கே]

### வகுப்பு

(கொழும்புத்துறை)

யாழ். பாஷையூர் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த பெண்களுக்கான தையல் பயிற்சி ஒன்றை மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது. (154)

### ஜம்மு தீவிரவாதிகள் மத்திய அரசுக்கு அழைப்பு

(சண்டிகார்)

காஷ்மீர்நெருக்கடிக்கு சமாதானமூலம் தீர்வுகாண முன்வருமாறு காஷ்மீரில் ஆயுதப் போராட்டம் நடத்திவரும் தீவிரவாதக் குழுத்தலைவர்கள் அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜம்முகாஷ்மீர்விடுதலை முன்னணியின் தலைவரான அமானுல்லகானே இந்த அழைப்பை விடுத்தவராவர்.

காஷ்மீரில் அநியாயமாக நடைபெற்றுவரும் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (கே)

### இன்று

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 11ந் திகதி வியாழன் பி. ப 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

### மனநிலை பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தற்கொலை

(யாழ்ப்பாணம்]

90ம் ஆண்டு கொக்காவில் முகாம் தகர்ப்பிற்குப்பின்னர் அப்பகுதிக்கு சென்று மிதிவெடியில் காலிழந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையத்திற்கருகில் வசித்து வந்தவரான சிதம்பரப்பிள்ளை ஆனந்தராசா [வயது 23] என்பவரே நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டவராவர்.

கால் இழந்து மனோநிலை பாதிக்கப்பட்டிருந்த இவர் கடந்த வாரமும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு அனேக நித்திரைக்குளிசைகளை உட்கொண்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (56)

# ஜனாதிபதியை சந்தித்தபின்

# மீண்டும் யாழ். வருவோம்

## பௌத்த குழு கடிதம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்களின் இன்றைய பிரச்சினை சமாதானமாகவும், பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்க்கப்படவேண்டும். இதனையே நாமும் விரும்புகின்றோம். இதற்கான வழிவகைகளிலேயே நாம் இன்னமும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம்"

இவ்வாறு யாழ். நகருக்கு அண்மையில் விஜயம் செய்த தென்னிலங்கை பௌத்த குருமார் சமாதானக் குழுவின் இணைப்புச் செயலாளர், பண்டித் மாதம்பகம அஜாஜி தேரோ, யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் நகரில் வைத்து நீங்கள் எங்களிடம் கையளித்த மகஜர்களை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களிடம் சமர்ப்பித்து அது பற்றி உரையாடியுள்ளோம்.

மேலும் இதுசம்பந்தமாக ஜனாதிபதியையும், அமைச்சர்களையும் மிகவிரைவில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்திவிட்டு, மீண்டும் ஒருமுறை நாம் யாழ். நகருக்கு வருவதற்கு எண்ணியுள்ளோம் என்று பண்டித் மாதம்பகம அஜாஜி தேரோ தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (வி)

# முல்லை. அலம்பிலில் தொடர் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு-அலம்பில் பகுதிப் படையினர் செம்மலை, குமிழமுனை, முள்ளியவளை, வட்டுவாகல், மற்றும் கிராமங்களை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாக வந்தவர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் ஏற்கனவே இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து மக்கள் பிறஇடங்களுக்குச் சென்றபடியினால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றும் இப்பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (56)

# வல்வை கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கடற்பகுதியிலிருந்து நேற்று அதிகாலை சடும் பீரங்கித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் வல்வை பகுதியில் பலவீடுகள் சேதமுற்றன.

நேற்று அதிகாலை 5 மணி முதல் 5-30 வரை மேற்படி தாக்குதல் நடைபெற்றது.

வல்வை ஆதிகோவிலடி, மயிலியதனை போன்ற குடிமனைப் பகுதிகளை நோக்கி பீரங்கித்தாக்குதல் நடாத்தப்பட்டது. (51 56)

## புலமைப்பரிசில் விண்ணப்பம்

(வட்டுக்கோட்டை)

1992ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர் வரும் ஜாஜி மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை உடனடியக நிரப்பி இம்மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பண்டத்தரிப்புக்கல்விக்கோட்ட நிர்வாக அதிகாரி திரு. எஸ் சபாநாதனிடம் ஒப்படைக்குமாறு பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட சிரேஷ்ட உதவிக்கல்விப்பணிப் பணிப்பாளர் திரு. க மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். [139]

## விவாக பதிவாளர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாவட்டப் பதிவாளர் அலுவவக லிகிதர் திருமதி சகுந்தலா பாலச்சந்திரன் விவாகப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (52)

## கைத்தறி மட்பாண்ட

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கைத்தறி நெசவு நிலையங்களை திருத்துவதற்கும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (137)

# பதினாறு பேருக்கு எழுதுவினைஞர் நியமனம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் 16 பேர் எழுதுவினைஞர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், யாழ். அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகரினால் வழங்கப்பட்டது.

போட்டிப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற மேலும் 16 பேருக்கு நேற்றுத் தொடக்கம் எழுதுவினைஞர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

14 பேர் யாழ். அரசாங்கச் செயலகத்துக்கும், இருவர் யாழ். கட்டடத் திணைக்களத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். அரசாங்க செயலகத்துக்கு நியமனம் செய்யப்பட்ட 14 பேரில் 12 பேர் சமூக சேவைத்திணைக்களத்துக்கு நியமனம் செய்யப்பட்டுளது குறிப்பிடத்தக்கது [37]

## துர்க்கை அம்மன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துறைவீதியிலுள்ள இறந்தவர்களின் வீட்டில் இருகுண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

குண்டு வீச்சின்போது அங்கு இருந்தவர்களான இராசையா மகாலிங்கம் (65 வயது), திருமதி சிவபாக்கியம் மகாலிங்கம் (63 வயது), செல்வி மதனகலா மகாலிங்கம் (20 வயது), சுபாஸ் சந்திரன் (45 வயது) ஆகியோரே உடல் சிதறிய நிலையில் பலியானவர்களாவர்.

நேற்றுக் காலை மீண்டும் இவ்வீட்டிற்குச் சென்று இவர்கள் குடியிருந்த போதே இப்பரிதாப சம்பவம் நடைபெற்றது.

கடந்த 31-ம்திகதி தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலின்போது இவர்கள் இடம் பெயர்ந்து மல்லாகத்தில் தங்கியிருந்தவர்களாவர். [56]

## உள்ளக இடமாற்றம்

(மானிப்பாய்)

யாழ் மாவட்டத்தில் திட்டம் செயல்படுத்தும் உத்தியோகத்தர்களாக பணிபுரியும் சிலருக்கு இம்மாவட்டத்துக்குள்ளேயே உள்ளக இடமாற்றம் உடனடியாக செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கான இடமாற்ற உத்தரவு வடக்கு கிழக்கு மாகாண சபையினால் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

## ஹெலி தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிப் பிரயோகத்தை மேற்கொண்டன.

பலாலி முகாமிலிருந்து நேற்றுமுன்தினமிரவு 11 மணியளவில் சுழிபுரட்டல் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது 10க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டது.

அனேகமான ஷெல்கள் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் பகுதியிலே வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (56 86)

## தெரிவுக் குழுவை

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

வரை நியமித்து தெரிவுக் குழுவின் கூட்டத்தை தொடர்ந்தும் நடாத்துவதென அரச நாடாளுமன்ற எம். பிக்கள் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கே)

# ஊரடங்குவேளையிலும் இங்கு விளையாட்டு போட்டி நடக்கிறது

## கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்று 2வது ஆண்டு நிறைவு நாளன்று இந்த விளையாட்டுப்போட்டி இந்த மைதானத்தில் நடைபெற்றது ஒரு முக்கிய அம்சமாகும்.

கேலிக்கூத்து நிறைந்த இந்த ஊரடங்கை மாணவர் பொருட்படுத்தாது குறித்த நேரத்துக்கு மைதானத்துக்கு சமூகம் கொடுத்து இப்போட்டியை நடாத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியது பாராட்டப்படவேண்டியது.

இவ்வாறு யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற யாழ் மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு.இ. சுந்தரலிங்கம் கூறினார்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். உதவிக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு த அருணகிரிராஜா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இப்போட்டியில் யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, வடமராட்சி கல்விக் கோட்டங்கள் வெற்றிபெற்றன. (வி)

## பூநகரியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டதாக அரசு தரப்புச் செய்தி நேற்று 'ரூபவாஹினி'யில் அறிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் படைமுகாம் ஒன்றிற்கு சென்று கொண்டிருந்தபோதே இந்த ஜீப் கண்ணிவெடியில் சிக்கித் தகர்க்கப்பட்டது.

இதில் சென்ற லெப் கேர்ணல் மற்றும் லெப்டினன் தர இரு உயர் இராணுவ அதிகாரிகளும், கடற்படை உயர் அதிகாரியும் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். எனினும் இவர்கள் பெயர் விபரம் அறிவிக்கப்படவில்லை.

அண்மையில் தெல்லிப்பழையில் இலங்கை இராணுவத்தின் 3வது அணியின் இரண்டாவது தளபதியான லெப். கேர்ணல் சூரியசேன நாயக்கா உட்பட கடந்த 15 நாட்களில் வடக்கு-கிழக்கில் ஒன்பது உயர் அதிகாரிகள் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. (சி)

## செஞ்சிலுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதனைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை மதத்தலைவர்களால் மௌனப் பேரணி நடாத்தப்பட்டு அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது.

நேற்று மீண்டும் இப்பகுதியில் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டது. [56]

## புலிகளின்

கனை மேற்கொண்டதாகவும், இந்தத் தாக்குதல்களில் பல படையினர் உயிரிழந்ததாகவும் இதனையடுத்தே ஊரடங்கு அமுல்படுத்தவேண்டிய அவசியம் படையினருக்கு ஏற்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## திருமலை - மன்னாரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் மேலதிக படைப்பிரிவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் புலிகளின் தாக்குதலில் இப்பகுதிகளில் 17 படையினர் கொல்லப்பட்டதையடுத்தே இந்த ஏற்பாடாம். (சி)

## பொன்னாலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக்கொண்டதனால் தெய்வாதீனமாக உயிர்சேதங்கள் ஏற்படவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# சண்டிலிப்பாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வட்டமிட்ட மூன்று பொம்மர் விமானங்கள் ஐந்துக்கு மேற்பட்ட குண்டுகளை வீசின. இக்குண்டுகள் யாவும் மக்கள் ஓடிய பகுதிகளை நோக்கியே வீசப்பட்டன.

படுகாயமடைந்தவர்கள் யாவரும் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர்கள் அவர்கள் விபரம் வருமாறு:-

சத்தியவடிவேல் சாந்தன் (9-வயது), சத்தியவடிவேல் விஜேதா (7-வயது), சத்தியவடிவேல் சுதர்ஸன்(1½-வயது) கந்தசாமியின் வாய் பேசாத 10 வயது மகன், செல்வி தர்ஸினி சிவானந்தன் (15-வயது), பிரேமரஞ்சினி ஐயாத்துரை [24 வயது], செல்வி ஜெனு மகலிங்கம்[04 வயது], திருமதி மகாலட்சுமி சுரேந்திரன் [34 வயது], திருமதி புஷ்பராணி சிறீஸ்கந்தராசா [32 வயது] திருமதி கனகம்மா செல்லத்துரை [60-வயது], திருமதி எம். லீலா [60 வயது] ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

மாகியப்பிட்டி கல்வளை முருகன் ஆலயம், சிறுவர் பாடசாலை உட்பட ஐந்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமாகின.

மற்றும் ஒரு இளம் பெண்ணும் பலியானதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் அச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப் படவில்லை. [56]

## மரண அறிவித்தல்

### மூத்ததம்பி அமுதபிள்ளை

(முன்னாள் ஓய்வுபெற்ற இ. போ. ச. சாரதி, பருத்தித்துறை டிப்போ)

குப்பிளானைச் சேர்ந்த மூத்ததம்பி அமுதபிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், அமுதமணி, அமுதலதனி, அமுதராசவதனி (கொலன்ட்), தவலிங்கம் (டென்மார்க்), அமுதரூபினி, தவக்குமார் (சுவிஸ்), அமுதகௌரி (சுவிஸ்), அமுதராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், வி. சுந்தரலிங்கம் (சுருட்டுத் தொழில் முதலாளி), கணபதிப்பிள்ளை (சவுதி), இ. இராஜரட்ணம் (கொலன்ட்), திருநாவுக்கரசு, ஞானபாலன் (சுவிஸ்), த. பராசக்தி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-6-92 (இன்று) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கன்னிமார் கோவிலடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குப்பிளான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கன்னிமார் கோவிலடி, குப்பிளான். [சி 6411]

அ. தவமணி (மனைவி).

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி [illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/10336/81